# ‘‘ விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர்களின் பங்களிப்பு ’’ மண்முனை வடக்கு பிரதேசத்தில் உள்ள விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**JESUIYA DILANI**

TEMPORARY ASSISTANT LECTURER, DEPARTMENT OF EDUCATION AND CHILD CARE,

FACULTY OF ARTS AND CULTURE, EASTERN UNIVERSITY, SRI LANKA

dilanijesuiyah@gmail.com

**ஆய்வுச்சுருக்கம் :** “ விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் பங்களிப்பு ” எவ்வாறு இருக்கின்றது என்பதை இணங்காணுவதற்காகவே மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரிவிற்குட்பட்ட விசேட கல்வி நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கு கல்வியினை வழங்க நிறுவனங்கள் தயாராக உள்ள போதும் பெற்றோர்கள் இதற்கு தயாராக இல்லை. விசேட தேவையுடைய பிள்ளைகள் தங்களுடைய தாழ்வு மனப்பான்மை காரணமாக ஒதுங்கியிருக்கின்ற நிலை காணப்படுகின்றது. அத்தோடு விசேட தேவையுடைய பிள்ளைகளை சமூகத்தினர் இழிவாகப் பார்க்கின்ற நிலையினை மாற்றி அமைக்க வேண்டும் எனின் விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர் பங்களிப்பு அவசியமாகும்.

ஆய்வினை மேற்கொள்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் இருக்கின்ற விசேட கல்வி நிறுவனங்களில் இருந்து வசதி மாதிரிக்கு ஏற்ப தரிசனம், வாழ்வோசை, புகலிடம், ஓசானம் போன்றவை தெரிவு செய்யப்பட்டது. நான்கு நிறுவனத்தின் கல்வி கற்கின்ற பிள்ளைகளின் பெற்றோர்களில் இருந்து இலகு எழுமாற்று மாதிரிமூலம் 34 பெற்றோர்களும், ஆசிரியர் தொகை குறைவாக உள்ளதால் 30 ஆசிரியர்களும், 4 பொறுப்பாளர்களும், அனைத்துப் பிள்ளைகளும் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கான தகவல் பெறப்பட்டது. ஆய்வு மாதிரியில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாளர்கள், ஆசிரியர், பெற்றோர், பிள்ளைகள் ஆய்வுக் குடித்தொகையாக மேற்கொள்ளப்பட்டு வினாக்கொத்து, அவதானம், நேர்முகங்காணல் போன்ற ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் Micro Soft Excel-2007 மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றல் எவ்வாறு காணப்படுகின்றது? விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றது? விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர் பங்களிப்பு செய்யாமைக்குரிய காரணங்கள் கண்டறியப்பட்டு விதந்துரைப்புக்களும் முடிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளது. பெற்றோரிடையே விசேட கல்வி பற்றிய தெளிவின்மையும், அசமந்தப்போக்கும் விழிப்புணர்வின்மையும், பெற்றோரின் இரத்த உறவுத் திருமணமும், பெற்றோரிடயே பொருளாதாரப்பற்றாக்குறை, பெற்றோரின் தவறான பழக்க வழக்கங்கள், பல்வேறு செயற்பாடுகள், விசேட கல்வி நிறுவனத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் தொடர்பின்மை போன்றவை விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர் பங்களிப்பு செய்யாமைக்குரிய காரணங்களாக அடையாளப்படுத்தப்பட்டது. இதற்கு தீர்வினை வழங்குவதன் ஊடாக விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலினை ஊக்குவிப்பதுடன் நாட்டின் பொருளாதாரம் அதிகரித்து நாடு அபிவிருத்திப் பாதை நோக்கி கொண்டு செல்லப்படும் என்பதில் ஐயமில்லை.

**அருஞ்சொற்பதங்கள் :** விசேட தேவையுடைய பிள்ளைகள் , கற்றல், பெற்றோர், விசேட கல்வி வழங்கும் நிறுவனங்கள்.



ISBN 978-955-627-120-1

## 1 . ஆய்வு அறிமுகம்

### 1.1 அறிமுகம்

''விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோரின் பங்களிப்பு'' என்ற தலைப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேசத்தில் விசேட கல்வி வழங்கும் நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. விசேட தேவையுடைய பிள்ளைகள் தோற்றம் பெறுவதற்கு அக, புற காரணிகள், பெற்றோர்களின் நடவடிக்கைகளும் காரணமாக உள்ளது. இந்த வகையில் பிள்ளைகளை சுமையாக எண்ணி அவர்களை கவனத்தில் எடுக்காமல் இருப்பதோடு கல்வியில் அக்கறை இல்லாமல் அசமந்தப்போக்குடன் காணப்படுகின்ற நிலை அதிகரித்துக் கொண்டு வருகிறது. இத்தகைய நிலைப்பாடு பெற்றோரிடத்தில் மட்டுமன்றி சமூகத்திலும் அதிகரித்துக் கொண்டும் வருகின்றது. விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலினை பொருட்படுத்தாது விட்டால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குரியாக்கப்படுவதோடு பின் தள்ளப்பட்டும் சமூகத்தில் காணப்படுவார்கள்.

விசேட தேவையுடைய பிள்ளைகளை ஏனைய சாதாரணமான பிள்ளைகள் அலட்சியமாகப்பார்க்கின்ற நிலையும் , ஒதுக்கி வைக்கின்ற நிலையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையின் பெரும் பங்குதாரர்களாக பெற்றோர்கள் விளங்குகின்றனர். பெற்றோர்கள் தம்முடைய சாதாரண பிள்ளைகளை அன்புடனும் , அக்கறையுடனும் செயற்படுவதை போன்று விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வியுடனும் அக்கறையுடன் செயற்படாமல் விட்டால் அவர்களிடையே தாழ்வு சிக்கலையும் விட்டு ஒதுங்கியிருக்கின்ற தன்மையை அனுபவிக்கின்ற நிலை தோன்றும். அத்துடன் தீய சொற்கள் பேசுதல், தவறான பழக்க வழக்கங்கள், நடத்தைகள், முரண்பாடுகளில் ஈடுபடுதல், மதுபாவனை, புகைத்தல் போன்ற நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவதோடு இச் செயற்பாடுகளில் அதிக விருப்பத்தைக்காட்டுவார்கள். இதை மாற்றியமைப்பவர்களாக பெற்றோர் காணப்படுவதில்லை.
விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கு கல்வியினை வழங்குவதன் மூலம் அவர்கள் தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொண்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனால் எல்லோருடைய பங்களிப்பும் இருக்க வேண்டி இவ்வாய்வு மேற் கொள்ளப்படுகிறது. விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கு கல்வி வழங்குவதற்கென்று மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைவான நிலையங்களே உள்ளது. சில நிறுவனங்கள் இருப்பினும் பெற்றோர்கள் அனுப்பும் வீதம் குறைவாக உள்ளது. விசேட தேவையுடையவர்களிற்கு கற்பிப்பதற்கான நூல்கள், ஆசிரியர்கள், கற்றல்-கற்பித்தல் உபகரணங்கள், துணைச்சாதனங்கள், வழிகாட்டல்கள் என்பன அரிதாக காணப்படுகிறதை அவதானிக்கப்படுகிறது.

விசேட தேவையுடையுடைய பிள்ளைகள் எதையும் செய்யமாட்டார்கள் என்று பரிதாபமாய்ப் பார்க்கின்ற நிலை பெற்றோர்களிடம் அதிகரித்து வருகின்றது. விசேட கல்வியினை வழங்குகின்ற நிலையங்கள் முன்வந்தாலும் பெற்றோர்கள் அலட்சியமாக எண்ணுதல், கல்வி நிறுவனங்களிற்கு அனுப்பி விட்டாலும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் அசமந்தப்போக்காக காணப்படல், மேலும் விடுதி வசதியுடன் கல்வி நிறுவனங்கள் காணப்படுவதால் அங்கேயே அனுப்பி விட்டு அக்கறையின்றி செயற்படுதல் போன்ற பலவும் பெற்றோர்களிடம் காணப்படுகின்றன. பெற்றோர்களிடம் விசேட கல்வி தொடர்பாக விழிப்புணர்வு காணப்படவில்லை. இவ்வாறான பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு அறிமுகப்படுத்தப்படுகிறது.



ISBN 978-955-627-120-1

### 1.2 ஆய்விற்கான பின்னணி

விசேட தேவையுடைய பிள்ளைகள் கல்வியில் மட்டுமன்றி ஏனைய நடவடிக்கையிலும் ஒதுக்கப்பட்டவர்களாகவும், பின் தள்ளப்பட்டவர்களாகவும் காணப்படுகின்ற நிலையை மட்டக்களப்பு மாவட்டத்தில் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையை மாற்றியமைக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கு கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள் கல்வியை வழங்குகின்றனவா? எதிர்காலத்தில் வாழ்கை தரத்தினை உயர்த்துவதற்கான வழிகள் எத்தகையது , பெற்றோரின் பங்களிப்பு சிறப்பாக இருக்கின்றதா? என்பதை ஆய்வுசெய்வதாகவுள்ளது.

விசேட தேவையுடைய பிள்ளைகள் ஏனையவர்கள் போன்று மதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அரச பாடசாலைகள் இருந்தாலும் இதனை பிள்ளைகள் விரும்புவதில்லை. அதாவது சக பிள்ளைகள் தாழ்த்தப்படுவார்கள் என்ற நோக்குடன் தனியார் நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்வோசை, ஓசானம், புகலிடம், தரிசனம், மென்க.்.ப் போன்றவற்றை கூறலாம். இவை விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில் அமைந்து காணப்படுகிறது இந்நிலை சந்தோசத்தை அளித்தாலும் பெருமளவில் கவலையையும் அளிக்கிறது.

அத்துடன் விசேட தேவையுடையுடைய பிள்ளைகள் தாங்களும் கல்வியை பெற வேண்டும் என்ற எண்ணத்தினால் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் இவ்வாய்வு தெரிவு செய்யப்படுகிறது. இவர்களிடம் பல்வேறு திறன்கள் மறைந்து காணப்படுகின்றது. அதை வெளிக்காட்டுவதற்கு தக்க நிலை காணப்படாத தன்மையும் இவர்களிடத்து காணப்படுகிறது. இதனை ஆய்வு செய்வதற்கும் இவ்வாய்வு உதவுகின்றது. அத்துடன் பெற்றோர்கள் பிள்ளைகளுடன் அதிகளவில் நேரம் செலவிடாத தன்மையினால் பிள்ளைகள் அதிகளவில் மன உளைச்சலிற்கு உள்ளாகின்ற நிலையும் காணப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கு கல்வி வழங்கும் நிறுவனங்கள் காணப்படுகின்ற போதிலும் புகலிடம், ஓசானம், வாழ்வோசை, தரிசனம், மென்கப் போன்றவை காணப்படுகிறது. இந் நிறுவனத்தின் கல்வி மற்றும் ஏனைய நடவடிக்கைகள் எவ்வாறு காணப்படுகிறது? பிள்ளைகளின் அக்கறை கொண்டு நிறுவனம் செயற்படுகிறதா? என்பதை சமூக மட்டத்தில் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### 1.3 ஆய்வுப்பிரச்சினை

விசேட தேவையுடைய பிள்ளைகள் தாழ்வுச்சிக்கல்களை எதிர் கொள்கின்றனர். அதாவது வகுப்பறையில் எப்போதும் பின் வரிசையில் இருப்பவர்களாகவும் தங்களால் இயலாது என்ற மனப்பான்மையோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டாதும் இருக்கின்றனர். சாதாரண பிள்ளைகளால் ஒதுக்குகின்ற நிலை காணப்படுகிறது. இதனால் கற்றலை தொடர முடியாததால் மனவிரக்தி அடைகின்றனர் என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேசத்தில் காணப்படும் விசேட கல்வி நிறுவனங்களின் கல்வி கற்கும் பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக பெற்றோர்கள் என்ன நிலைப்பாட்டினை கொண்டுள்ளார்கள் என்பதை அறிதலாகும். விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் எல்லோரினதும் பங்களிப்பு அவசியம். சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கற்றலில் மட்டுமன்றி நலனிலும் ஆர்வத்தை காட்டுகின்றனர். அதிகமான பெற்றோர்கள் அவ்வகையான ஆர்வத்தை காட்டுவதில்லை. எனவே சமூகங்களின் மத்தியில் விசேட தேவையுடைய பிள்ளைகளின் திறமைகளை தெரியப்படுத்துவதுடன் பெற்றோரின் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியம். அத்தோடு விசேட



ISBN 978-955-627-120-1

தேவையுடைய பிள்ளைகள் அனைத்து துறைகளிலும் சாதிக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்தி இப்படியான விசேட தேவையுடைய பிள்ளைகளைப் பெற்றெடுத்த பெற்றோர்களின் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகும்.

**1.4 ஆய்விற்கான நியாயம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேடதேவையுடையோரின் எண்ணிக்கை பெருந்தொகையாக காணப்படுகின்றது. இந்நிலையில் விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கான கல்வியை வழங்குவதில் பெற்றோரின் பங்களிப்பானது குறைவாக காணப்படுகிறது. இப் பிள்ளைகளிற்கு வழங்கும் கல்வி தொடர்பாக பெற்றோர்கள் குறைவான அறிவைக் கொண்டு காணப்படுகிறார்கள். இவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கியமான விடயமாகும். தற்காலத்தில் பெரும்பாலான பிள்ளைகள் கற்றல் செயற்பாடுகளில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனை படைத்து வருகிறார்கள். அவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப்பட கூடாது. அவர்களின் எதிர்காலம் விடியலை நோக்கி தொடர்ச்சியாக செல்ல வேண்டும் என்றால் பெற்றோரின் தொடர்ச்சியான பங்குபற்றலும் அவசியமானதாகும்.

சமூகத்தின் மத்தியில் இப்பிள்ளைகளை வித்தியாசமாக பார்க்கின்ற கண்ணோட்டம் அல்லது அணுகும் முறைகளை நோக்க முடிகிறது. இவர்கள் பேசும் போது மூளையற்றவர்கள் , பைத்தியம் பிடித்தவர்கள், ஊமையர்கள் என்றெல்லாம் அழைக்கின்றனர். இச் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது முக்கியமாகும். கிராமத்தில் உள்ள விசேட தேவையுடைய பிள்ளைகளின் தேவைகள் நிறைவு செய்யப்படும் போது மாகாணம், மாவட்டம், தேசியம் என்ற வகையில் தேவைகள் நிறைவு செய்யப்படும். நாட்டின் மொத்த வருமானத்தில் சாதாரண பிள்ளைகளின் பங்களிப்பு அதிகமாக காணப்படுவது போல விசேட தேவையுடைய பிள்ளைகளின் நிலைப்பாடும் முக்கியமாக காணப்படுகிறது. இதற்கு பெற்றோர்களின் பங்கு பற்றல் அவசியமாகும் அவர்கள் கற்றலில் மட்டுமன்றி ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அக்கறை கொண்டு செயற்பட வேண்டியதற்கும் இவ்வாய்வு முக்கியமாகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர்கள் அக்கறையின்மையால் இப்பிள்ளைகள் தொடர்சியாக கஸ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இந்நிலையை மாற்றி சாதாரண மக்களின் நடவடிக்கை போல ஏற்படுத்த பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகும். சாதாரண பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கே நேரம் போதாது இருக்கின்ற காரணத்தால் விசேட தேவையுடைய பிள்ளைகளை சுமையாக எண்ணுதல், பெற்றெடுத்த பாவம் என்ற மனோநிலையில் காணப்படுதல். இவ்வகையான மன நிலையை மாற்ற வேண்டும், விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு காணப்படுகிறது. பெற்றோருக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும் இதன் மூலம் விசேட தேவையுடைய பிள்ளைகளின் எதிர்காலம் மகிழ்சியாக அமைய வேண்டும் என்பதால் இவ்வாய்வு முக்கியமாகிறது.

**2.0 இலக்கிய மீளாய்வு**

உடல், உள, சமூக மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள் சாதாரண மாணவர்களை விட பல சிக்கலான நடத்தைகளை வெளிக்காட்டுகின்றனர். அத்துடன் அவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடையாது தத்தளிக்கிறார்கள். அவ்வாறான மாணவர்களிற்கு அளிக்கப்படும் கல்வியே விசேட கல்வியாகும். இக்கல்வியை பெற்றுக் கொள்ளும் பிள்ளைகள் சாதாரண பிள்ளைகளை விட வகுப்பறைக் கற்பித்தல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்கள் துலங்களை ஏற்படுத்த முடியாது அவதியுறுகின்றனர்.



ISBN 978-955-627-120-1

விசேடதேவையுடையவர்கள், மாற்றுத்திறனுடையோர், மாற்றவலுவுள்ளோர் என்று மாற்றுச் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கின்றனர். (யசோதா, 2011)

விசேட தேவையுடையவர்களின் வகைப்பாட்டினை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்

1- உடல் ஊனங்கள்(Psysical handicaps) - பார்வையற்றோர்(Blind)
செவிப்புலனற்றோர்(Deaf &Dumb)
ஊனம்

2- அறிவு வளர்ச்சிக் குறைபாடு(Mental handicaps) - மீத்திறன் மிக்கோர் (Gifted)
பிற்போக்குத்தனம் (Back ward)
மன வளர்ச்சிக்குறைவு
(Mental rutoktation handicaps)

3- சமூக நெறி பிறழ்வு (Social handicaps) - இளங்குற்றவாளிகள் (Juvenile)
பிரச்சினைக்குரியவர்

(பங்கஜம் , 2000)

### 3.0 **ஆய்வு முறையியல்**

மண்முனை வடக்கு பிரதேசத்தில் காணப்படுகின்ற விசேட கல்வி பெறும் நிறுவனங்களில் கல்வி கற்கும் பெற்றோர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்கின்றது என்பதை அறிதலை அடிப்படையாக கொண்டு ஆய்வு அமைகின்றது. இவ்வாய்வானது தற்கால நிகழ்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை அளிக்கும் வகையில் அமைவதால் ஓர் அளவை நிலை ஆய்வாக அமைகிறது. இவ்வாய்வை மேற்கொள்வதற்கு முன்னர் ஆய்வின் நோக்கங்கள், குடித்தொகை, ஆய்விற்கான வளங்கள் போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டது.

### **3.1 ஆய்வின் நோக்கம்**

1- விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் காணப்படும் தொடர்பை இனம் காணல்.
2- விசேட தேவையுடைய பிள்ளைகளின் குறைபாடுகளை அவதானித்தல்.
3- விசேட தேவையுடைய பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர் பங்களிப்பு செலுத்துவதை கண்டறிதல்.
4- விசேட கல்வி நிறுவனங்களின் குறைபாடுகளிற்கேற்ற கல்வி வழங்கப்படுகிறதா என்பதை அறிதல்.
5- விசேட கல்வி நிறுவனங்களின் குறைபாடுகளிற்கேற்ப கல்வி வழங்கப்படுகிறதா என்பதை முன்மொழிதல்.

### **3.2 ஆய்வின் மாதிரித்தெரிவு**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கு கல்வி வழங்கும் நிறுவனங்கள் காணப்படுகின்றது. ஆய்வானரின் வசதி கருதி புகலிடம், வாழ்வோசை, தரிசனம், ஓசானம் போன்ற நிறுவனங்கள் வசதி மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு ஆய்வாளரினால் ஆய்விற்குட்படுத்தப்பட்டது.



ISBN 978-955-627-128-1

| நிறுவனம் | கேட்டல், பேச்சுக் குறைபாடு | பார்வைக் குறைபாடு | டவுன் சின்றோம் | ஓட்டிசம் | மெதுவான வளர்ச்சிக் குறைபாடு | மெல்லக் கற்போர் | உடல் உளக் குறைபாடு | மொத்தம் | ஆசிரியர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| புகலிடம் | 2 | 3 | 4 | - | 6 | 1 | 3 | 19 | 3 |
| ஓசானம் | - | 1 | 8 | 2 | 13 | - | 6 | 30 | 5 |
| தரிசனம் | - | 20 | - | - | - | - | - | 20 | 14 |
| வாழ்வோசை | 46 | - | - | - | - | 3 | - | 49 | 8 |

விசேட கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் பிள்ளைகள் எல்லோரையும் அவதானம் மூலம் ஆய்விற்கு உட்படுத்தப்படுகிறது. விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர்களை தெரிவு செய்யும் போது இலகு எழுமாற்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டமுறை பின்வருமாறு அமைகின்றது.

(உ-ம்) புகலிட நிறுவனத்தை எடுத்துக்கொண்டால்

$$\frac{\text{புகலிட பெற்றோர் தொகை}}{\text{நான்கு நிறுவனங்களிலும் உள்ள பெற்றோர் தொகை}} \times 100$$

=19/118x100

=1900/118=16%

மாதிரியாக தெரிவு செய்யப்பட வேண்டிய பெற்றோர் தொகை

= 16/100x19

=3 பேர்

ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் அனைவரும் (30) பேரும் ஆய்வாளரினால் ஆய்விற்குட்படுத்தப்பட்டது. அத்துடன் 4 பொறுப்பாளர்களும் நேர்முகங்காணலிற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டது.

**4.0 தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**


இவ்வாய்வின் பகுப்பாய்வு செயன்முறையானது தரவு வடிவங்களை தீர்மானித்து பின்னர் தரவுகளை சேகரித்து அத்தரவுகளை பகுப்பாக்கம் செய்து Micro Soft Excel-2007 மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ளது. வினாக்கொத்தின் மூலமாக பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் பெறப்பட்ட தகவல்கள் எண்சார் தரவுகளாக மாற்றப்பட்டு பகுப்பு செய்யப்பட்டு அட்டவணையாக்கம் செய்யப்பட்டுள்ளது.பொறுப்பாளர்களிடம் பெறப்பட்ட தகவல்கள் நோக்கத்தின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு பண்பு ரீதியாக விளக்கப்படுகின்றன.



ISBN 978-955-627-128-1


## 4.1 தரவுப்பகுப்பாய்வு முடிவுகள்

### 4.1.1 விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் பெற்றோர்களிற்கும் இடையிலான தொடர்பு




*உரு 4.1 விசேட கல்வி தொடர்பாக பெற்றோரின் அறிவு*

பெற்றோர்களிடம் விசேட கல்வி பற்றி தெரியுமா? என வினவப்பட்ட போது மேற்படி தரவு பெறப்பட்டது. விசேட கல்வி தொடர்பாக தெரிந்து கொண்டவர்கள் இருப்பினும் பிள்ளைகளிற்கு எவ்வாறு கற்பிப்பது , எவ்வாறு நடந்து கொள்வது, தங்கள் பிள்ளைகள் அதனைப்பெற வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாண்மையான பெற்றோர்களிடம் இல்லை என்பது ஆய்வின்முலம் அறியப்பட்டது.





*உரு 4.2 கற்றல் செயற்பாட்டில் பெற்றோர் அக்கறை*

இத்தரவுகளின் மூலம் ஆசிரியரின் கருத்துப்படி பெற்றோர்கள் பிள்ளையின் கற்றலில் குறைவான அக்கறை செலுத்துவதனை அவதானிக்க முடிகிறது.




ISBN 978-955-627-120-1

### 4.1.2 பிள்ளைகளின் குறைபாடுகள்




*உரு 4.3 பெற்றோர் பிள்ளைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்*

பிள்ளைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளீர்களா? என பெற்றோர்களிடம் வினவியதற்கு ஆம் என்று 30 பெற்றோர்கள் 88.24 % , இல்லை என்பதற்கு 4 பெற்றோர்கள் 11.76 வீதத்திலும் பதிலளித்துள்ளனர். தரவுகளின் படி ஆம் என அதிக பதிலளிக்கப்பட்டாலும் இல்லை என்றும் தரவுகள் பெறப்பட்டுள்ளது இது குறைபாடுகளை சுட்டி நிற்கின்றது.





*உரு 4.4 பிள்ளைகளின் குறைபாடுகளிற்கு ஏற்ப கற்றலினை வழங்குதல்*

இத்தரவுகளின் அடிப்படையில் பிள்ளைகளிற்கு ஏற்ற கற்றலை உள்வாங்கி கற்பிப்பதாக ஆசிரியர்கள் அதிகமாக கூறியிருப்பினும் முற்றுமுழுதாக உள்வாங்கி கற்பிக்கவில்லை என்று 6.67 % ஆசிரியர்கள் தரவுகளை வழங்கியுள்ளனர்.




ISBN 978-955-627-120-1

**4.1.3 பெற்றோரின் பங்களிப்பு**




*உரு 4.5 பிள்ளைகள் பயன்படுத்தும் பிற உபகரணங்கள்*

நிறுவனத்தினர் வழங்கியுள்ள இத்தரவுகளின் படி பார்க்கின்ற போது விசேட தேவையுடைய பிள்ளைகளிற்கு தேவையான அனைத்து உபகரணங்களையும், பொருட்களையும் நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கின்றோம் அவர்களது கற்றலை மேம்படுத்த பெற்றோர்களின் பங்களிப்பு கேள்விக்குரியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள்.





*உரு 4.6 விசேட தேவையுடைய பிள்ளைகளை காணும் போது பெற்றோரின் வெளிப்பாடு*

இத்தரவுகளின் மூலம் மேற்காட்டப்படுகின்ற நடத்தைகளை பெற்றோர்கள் வெளிக்காட்டுவதாக ஆசிரியர்கள் தங்களது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இதன் மூலம் பெற்றோர்கள் பாசத்தை வெளிக்காட்டினாலும் கௌரவப்பிரச்சினை காரணமாக கல்வி நடத்தைகளில் பிள்ளைகளை ஈடுபடச்செய்வது குறைவாக உள்ளதை அறிய முடிகிறது.




ISBN 978-955-627-128-1

### 4.1.4 நிறுவனத்திற்கும் பெற்றோரிற்குமிடையிலான தொடர்பு




*உரு 4.7 நிறுவனத்திற்கு பிள்ளைகள் சென்று பார்வையிடுதல்*

இத்தரவுகளின் படி பார்க்கின்ற போது தவணை முடிவின் போது பிள்ளைகளை கட்டாயம் கூட்டிச்செல்ல வேண்டும் என்ற காரணத்தால் தவணை ஒரு முறை பெற்றோர்கள் செல்வதாக நிறுவனத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.இதன் மூலமாக கற்றலில் பெற்றோரின் பங்களிப்பு எத்தகையது என்பது அறிய முடிகிறது.





*உரு 4.8 பெற்றோர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்*

பிள்ளைகளின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொள்ளும் நிலை பற்றிய ஆசிரியர்களின் தரவு நிலை காட்டப்பட்டுள்ளது.இதில் இல்லை என்ற வகைப்பாட்டின் நிலைப்பாடே அதிகளவில் அமைந்துள்ளது.




ISBN 978-955-627-120-1

**4.1.5 விசேட கல்வி நிறுவனங்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பானது**




*உரு 4.9 விசேட கல்வி நிறுவனத்திற்கு பிள்ளைகள் ஒழுங்காகச் சமூகமளித்தல்*

விசேட கல்வி நிறுவனத்திற்கு பிள்ளைகள் சமூகமளிக்கின்ற நிலை பற்றிய வினாவிற்கு மேற்படி தரவுகள் பெறப்பட்டது. இதன் மூலம் பிள்ளைகள் ஊக்கத்துடன் கற்றலை மேற்கொள்கின்றனர் என்பது தெரிகின்றது.




*4.10 நிறுவனத்தில் காணப்படும் பிரச்சினைகள்*

நிறுவனத்திற்கு தேவையான அனைத்து வளங்களும் காணப்படுகின்றதா என நிறுவனத்தினரிடம் வினவிய போது பல்வேறு வளப்பற்றாக்குறை நிலவுவதாக மேற்காட்டப்பட்டவாறு குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய நிலைப்பாடு புதியவர்களை இணைத்துக்கொள்வதற்கு இடர்பாடாக அமைவதாக குறிப்பிட்டுள்ளார்கள். இவை விசேட தேவையுடைய பிள்ளைகளில் கற்றலில் இடரபடும் நிலைகளை காட்டுகிறது.



ISBN 978-955-627-128-1

## 5.0 முடிவுகளும் விதந்துரைப்புகளும்

### 5.1.விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் தொடர்பின்மைக்கான காரணங்களும், தீர்வாலோசனைகளும்

பெற்றோர்களிடையே வெளிநாடு செல்லுதல், மனமுறிவால் ஏற்படும் பிரிவு, இறப்பின் மூலம் ஏற்படும் பிரிவு போன்ற நிலைகள் விசேட தேவையுள்ள குடும்பத்தினரிடயே ஏற்படும் போது பிள்ளைகளின் கற்றல் நிலை பாதிப்படைகிறது. இதனைக்குறைப்பதற்கு பிரிவினால் பிள்ளைகள் பாதிப்படைதலின் தன்மையை விளக்குதல், பிள்ளைகளை தினமும் சந்தித்தல் , முடியாதவிடத்து தொலைபேசியில் உரையாட வைத்தல், பாதுகாப்பு பற்றி கருத்தரங்குகளை வழங்குதல், விழிப்புணர்வு ஊட்டக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவன பொறுப்பாளர்கள் மேற்கொள்ளுதல் போன்றனவற்றை மேறகொள்ள வேண்டும்.

### 5.2.விசேட தேவையுடைய பிள்ளைகள் தோற்றம் பெறுவதற்கு பெற்றோரின் நடவடிக்கைகளும், தீர்வாலோசனைகளும்

பெற்றோர்களின் பிழையான செயற்பாடுகளும், இரத்த உறவுத்திருமணங்களும் இதற்கு காரணங்களாக அமைகிறது. அதாவது பெற்றோர்கள் மது அருந்துதல், புகைத்தல், தகாத உறவுகளை வைத்திருத்தல், கருக்கலைப்பிற்கு எத்தனித்தல் போன்ற செயற்பாடுகளும், உறவினர்களிடையே திருமணம் மேற்கொள்ளலும் குறிப்பிடத்தக்கது. இவற்றை நிவர்த்தி செய்ய தவறான பழக்கத்தை தடை செய்தல், பெற்றோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுகாதார திணைக்களத்தினால் செயலமர்வுகளை நடாத்துதல், உறவுத்திருமணங்களை தடுத்தல் தொடர்பாக கல்வியில் கற்றலை வழங்குதல், வீதி நாடகங்கள், விளம்பரங்கள் போன்ற பலவற்றை மேற்கொள்ளுதல் போன்ற பலவற்றை குறிப்பிடலாம்.

### 5.3.பெற்றோர்கள் பங்களிப்பின்மைக்கான காரணங்களும், தீர்வாலோசனைகளும்

முக்கிய காரணங்களாக பொருளாதாரப்பிரச்சினை, கல்வியறிவற்ற பெற்றோர்களுடைய தாக்கம் அதிகரித்து காணப்படுகிறது. அதாவது பெற்றோர்களின் வறிய நிலை, பொருளாதார அதிகரிப்பு, கற்றலிற்கான தேவைகளின் விலை அதிகரிப்பு போன்றனவும், பெற்றோர்கள் பிள்ளைகளின் நிலையில் அக்கறையின்மை, நவீன கற்றலின் தேவைப்பாட்டை உணராது செயற்படுதல் போன்றன காரணங்களாக அமைகிறது. இதனை தவிர்ப்பதற்கு பிரதேசத்தல் இருக்கின்ற மன்றங்கள், கழகங்கள், சமூக அமைப்புக்கள் விசேட தேவையுடையவர்களினது கல்விக்கு உதவுதல், வசதி படைத்தவர்கள் வறிய நிலையில் உள்ளவர்களிற்கு உதவிகளை வழங்க ஊக்குவித்தல், நிறுவனங்களிற்கு செல்லாமல் இருப்பவர்களை நிறுவனத்திற்கு அடையாளப்படுத்துதல், சமூர்த்தி கிராம சேவையூடாக வழிகாட்டலை மேற்கொள்ளுதல், சமூக மட்டத்தில் உள்ளவர்களின் உதவியை நாடல் போன்றவற்றை மேற்கொள்ளலும், கற்றவர்கள் மூலமாக கல்வியறிவற்றவர்களிற்கு கருத்தரங்குகள் வழங்குதலும், பிரதேச சபையில் உள்ளவர்களின் உதவிகளைப் பெற்று விழிப்புணர்வுகளை விசேட தேவையுடையவர்களின்கால் வழங்குதல் போன்றன தவிர்க்கும் வழிகளாக அமையும்.

### 5.4.விசேட கல்வி நிறுவனத்திற்கும், பெற்றோருக்கும் இடையில் தொடர்பின்மை தொடர்பான பிரச்சினைகளும், தீர்வுகளும்

நிறுவனத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் தொடர்புகள் குறைவாக காணப்படுதல், நிறுவனம் தனித்து இயங்குதல் அதில் தலையிட முடியாது என எண்ணுதல், ஆசிரியர்கள் பெற்றோரை மதிக்காமை, நிறுவனத்திற்கென்று உதவி தேடிச்செல்லும் போது வழங்குல் குறைவாக இருத்தல், பெற்றோரை பாவம்



ISBN 978-955-627-120-1

செய்தவர்கள் என தூற்றுதல் போன்றவற்றை காண முடிகிறது. இதற்கு கலை நிகழ்வுகளின் போது இருதரப்பினரையும் ஒன்றிணைத்தல், பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல், சமத்துவத்தை வழங்குதல் போன்றவற்றை மேற்கொண்டு பிரச்சினைகளை களைய முடியும்.

**5.5.நிறுவனங்களில் இடம் பெறும் கற்றல் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளும், தீர்வாலோசனைகளும்**

பெற்றோர்களின் கல்வி ஆர்வமின்மை செயற்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதாவது பெற்றோர்கள் கல்வியறிவின்றி கல்வியில் ஆர்வமின்றி காணப்படும் நிலை பிள்ளைகள் கற்றலை மேற்கொள்வதில் பிண்னடைவை காட்டுகிறது. அதுமட்டுமன்றி ஊனமாக பிறந்துவிட்டது இதற்கு ஏன் வீண் செலவு போன்ற நினைப்புகளும் பிள்ளைகள் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதனை குறைப்பதற்கு எதிர்காலத்தின் அவசியப்பாட்டை விளக்கி பொறுப்பாளர்கள், ஆசிரியர்கள் கூட்டங்களை நடாத்துதல், உயர்கல்வி ஒன்றியத்தின் மூலம் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துதல், முன்னேற்றமடைந்த பிள்ளைகளை முன்னுதாரணமாக சுட்டிக்காட்டல், அரசாங்கத்தினால் விசேட தேவையுடையவர்களிற்கு பிரச்சினைகளை ஏற்படுத்துவோர் மீது நடவடிக்கை மேற் கொள்ள செய்தல் போன்றன பிரச்சினைகளை குறைக்க உதவும்.

**6.0 உசாத்துணை நூல்கள்**

அருள் மொழி, செ. (2008) கல்வி ஆய்வு முறைகள் .எவகிறீன் பிரிண்டர்ஸ். மட்டக்களப்பு

ஆனந்தராசா, எ.சி . (2006) உளவளத்துணை . வின்சு பப்ளிகேசன்.

கோகிலா,ம உம் தயா, சோ. (2005) மகிழ்வுடன் வாழ்தல். இலங்கை ஜேர்மன் அபிவிருத்தி ஒத்துழைப்பகம். கல்வியமைச்சு .தேசிய கல்வி நிறுவனம்

சின்னத்தம்பி,க . (2003) கல்வியியல் அளவீடும் மதிப்பீடும் .ஜெயா அரை நெசனல் கொழும்பு 13

சின்னத்தம்பி,மா. (2008) பாடசாலையும் சமூகமும். குமரன் பதிப்பகம்

சிவகுமார், ம. (2005) விசேட கல்வி அறிமுகம்

செல்வநாயகம், இ உம் இரவீந்திரன், ஆ.(2007) சீரிய சிந்தனை. திருவள்ளுவர் பிரஸ்

செல்வராஜா,மா. (2005) கல்வியில் அடிப்படை எண்ணக்கருக்கள். கிறிப்ஸ்மட்டு

சோபா,பா. (2013) இலங்கையின் கட்டாயக்கல்வி முறைகள். சக்தி அச்சகம்.ஏறாவூர்

மகேசன், கே. (2010) விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும். ஹீரா அச்சகம். மட்டக்களப்பு

விமலா,கி. (2003) வழிகாட்டலும் ஆலோசனைகளும் கே.எஸ்.யூ.கிராபிக்ஸ். ராஜகிரிய

முத்துலிங்கம், ச. (2002) கல்வியும் உளவியலும். லங்கா புக் டிப்போட்



ISBN 978-955-627-120-1

**சஞ்சிகைகள்**

அரசரத்தினம், பூ.க (2007) பிள்ளைகளை எப்படி அணுக வேண்டும்.அகவிழி

கேதீஸ்வரன், க. (2010) கல்வி . கல்வி மாணிச்சங்கம். கிழக்குப்பல்கலைக்கழகம். மட்டக்களப்பு

சந்திரசேகரம், ப. (2004) செவித்திறன் குறைவானோருக்கு கற்பித்தல் ,அகவிழி

ஜெயராசா, சபா. (2004) ஆபத்து விழிம்பிலுள்ள கற்போர். அகவிழி

ஜெயராசா, சபா. (2006) சமூக உளவியல் நோக்கில் அந்நியமாதல் .அகவிழி

ஜெயராசா, சபா.(2008) கற்றல் தொடர்பான இடர்களை எதிர்கொள்வோர். அகவிழி

**பத்திரிகைகள்**

அஷ்ஷெய்க் ரவூப்ஸெய்ன் (5-6-2010) மாணவர்களின் முன்னேற்றத்தில் பெற்றோரின் வகிபங்கு என்ன? விடிவெள்ளி

நளீரா,பா.2010. பெற்றோர் பிள்ளைகளிற்கிடையிலான இடைவெளியும் புரிந்துணர்வின்மையும்

**இணையத்தள முகவரிகள்**

www.bufetat.//information-pa tamil

www.savethechildren.lk

www.bibleintamil.com



ISBN 978-955-627-128-1